பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 04 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இத்தாலி இடையேயான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மத்தியப்பிரதேசத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மத்தியிலும், மாநிலங்களிலும் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. மேற்குவங்க மாநிலத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்தியப் படைகளை நிறுத்த கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி பட்டம் வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

இந்தியா - இத்தாலி இடையேயான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகளை அதிகரிக்க ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள இத்தாலி துணைப் பிரதமர் திரு. ஆண்டனியோ தஜானி, குடியரசுத்தலைவர் மாளிகையில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது பேசிய குடியரசுத்தலைவர், இந்தியாவும் – இத்தாலியும் பண்டைக்கால நாகரிக பாரம்பரியத்தை கொண்டவை என்றும், தத்துவம், இலக்கியம் மற்றும் கலைகள் மூலம் இரு நாடுகளும் ஒட்டுமொத்த உலகிற்கும் சேவையாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

புதிதாக உருவாகும் தொழில்நுட்பங்கள், புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் பாதுகாப்புத்துறையில் இரு நாடுகளும் நெருங்கிய ஒத்துழைப்பை கொண்டிருப்பதுடன் ஜி-20 போன்ற சர்வதேச அமைப்புகளிலும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மத்தியப்பிரதேசத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

போபாலில் மாநில அரசின் சார்பில் நடைபெறும் பால்வளத்துறை நிகழ்ச்சியில் பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்திக்கான ஒத்துழைப்பு குறித்த ஒப்பந்தம் திரு. அமித் ஷா முன்னிலையில் கையெழுத்தாக உள்ளது.

இதில் மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் மற்றும் பால்வளத்துறை சார்ந்த பல்வேறு பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

இன்று கையெழுத்தாக உள்ள ஒப்பந்தம் மூலம் மாநிலத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களின் வருமானம் அதிகரிப்பதுடன் இப்பகுதியில் பால் உற்பத்தியும் அதிகரிக்கும் என முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

புவனேஸ்வர் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆராய்ச்சி ஆய்வகத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. திறந்து வைத்தார்.

மேலும் அங்கு அமைக்கப்பட உள்ள பன்னோக்கு இரைப்பை சிகிச்சை வளாகத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டியதுடன், புவனேஸ்வர் எய்ம்ஸ் மருத்துவமனையின் மேம்படுத்தப்பட்ட இணையதளம் மற்றும் நோயாளிகளுக்கான ஒருங்கிணைந்த சேவை வசதிகளையும் அவர் தொடங்கி வைத்தார்.

பின்னர் அந்த மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அங்கு பணியாற்றும் துப்புரவு பணியாளர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்களுடனும் கலந்துரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

<<<>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்காக மத்தியிலும், பீஹார் மாநிலத்திலும் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுகள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

பட்னாவில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், கிராமப்புற மேம்பாட்டிற்கான மத்திய அரசின் திட்டங்களை பீஹார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமார் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதாக பாராட்டு தெரிவித்தார்.

பஞ்சாயத்ராஜ் தினமான இம்மாதம் 24ஆம் தேதி பீஹாரில் நடைபெறும் விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்க இருப்பதாகவும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

மேலும் பஞ்சாயத்ராஜ் பிரதிநிதிகளின் தேசிய அளவிலான மாநாடும் பீஹாரில் நடைபெற இருப்பதாகவும், இதில் நாடு முழுவதிலும் இருந்து வரும் பஞ்சாயத்து தலைவர்கள் கலந்துகொள்ள இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் பீஹாரில் கடந்த நிதியாண்டில் 7 லட்சத்து 90 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டதாகவும், நடப்பாண்டில் 5 லட்சத்து 30 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட இருப்பதாகவும் திரு. சௌஹான் தெரிவித்தார்.

<<<>>>

மேற்குவங்க மாநிலத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்தியப் படைகளை நிறுத்த கொல்கத்தா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்மாநிலத்தில் நடைபெற்ற போராட்டங்களின்போது, முர்ஷிதாபாத் மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில் ஏற்பட்டது

தொடர்பாக அம்மாநில சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. சுவேந்து அதிகாரி தொடர்ந்த வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே முர்ஷிதாபாத் மாவட்டத்தில் நிகழ்ந்த கலவரம் தொடர்பாக மத்திய உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன், மாநில தலைமைச் செயலாளர் மற்றும் காவல்துறை டிஜிபியை தொலைபேசியில் தொடர்புகொண்டு தற்போதைய நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் இப்பகுதிக்கு எல்லைப் பாதுகாப்புப் படையினர் கூடுதலாக அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் உள்துறை செயலாளர் தெரிவித்துள்ளர்.

அப்பகுதியில் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ள 300 எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் கூடுதலாக அனுப்பப்படும் 5 கம்பெனி வீரர்களும் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, ஆந்திரா மற்றும் புதுச்சேரி யூனியன்பிரதேசத்திற்கு உட்பட்ட மஹே, ஏனாம் பகுதிகளில் பலத்த சூறைக்காற்று வீசுவதுடன் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

இதனிடையே தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் கடும் வெயில் வாட்டிவந்த வேளையில் நேற்று பெய்த திடீர் மழையால் ஏற்காடு மலைப் பகுதியில் இதமான தட்பவெப்பம் நிலவுகிறது.

மலைப் பகுதிகளில் ஜெகரண்டா மலர்கள் பூத்துக்குலுங்குவது சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்த்துள்ளது என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

அனைவருக்கும் நீதி கிடைக்கச் செய்ய மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் கூறியுள்ளார்.

நாகாலாந்து மாநிலம் கோஹிமாவில் நடைபெற்ற மாநில அளவிலான சட்ட உதவி முகாமின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், நமது அரசியல் சாசனத்தில் நாட்டை வழிநடத்துவதற்கான நடைமுறைகளை வகுத்தளித்த அண்ணல் அம்பேத்கருக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இந்தியாவின் ஜனநாயக கட்டமைப்பை வடிவமைப்பதில் நாட்டின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சமூகநீதி முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பு 10 புள்ளி 8 பில்லியன் டாலர் அதிகரித்து கடந்த 4ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 676 புள்ளி 2 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வாராந்திர புள்ளி விவரத்தின்படி வெளிநாட்டு கரன்சி நோட்டுகளின் மதிப்பு 9 புள்ளி பூஜ்ஜியம் ஏழு பில்லியன் டாலர் அதிகரித்து 574 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கத்தின் கையிருப்பும் 79 புள்ளி மூன்று ஆறு பில்லியன் அளவுக்கு உயர்ந்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மோகன் பஹான் அணி பட்டம் வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் 2-1 என்ற கோல் கணக்கில் மோகன் பஹான் அணி வெற்றி பெற்று கோப்பையைக் கைப்பற்றியது.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 8 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பஞ்சாப் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 245 ரன் எடுத்தது.

246 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 18 புள்ளி 3 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 247 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியையும், தில்லி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியின் கலப்புக் குழு பிரிவில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

அமெரிக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியாவின் **Rishab Yadav, Jothi Sureka Vennam** அணி, 153-151 என்ற புள்ளிக் கணக்கில் தைவான் அணியை வென்றது.

<<<<>>>>

புனேயில் நடைபெற்று வரும் **Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக் கணக்கில் தென் கொரியாவை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்ரீவல்லி ராஷ்மிகாவும், இரட்டையர் பிரிவில் அங்கிதா ரெய்னா – பிரார்த்தனா இணையும் வெற்றி பெற்றனர்.

இதுவரை நடைபெற்ற 5 ஆட்டங்களில் இந்தியா 4-ல் வெற்றி பெற்றதன் மூலம் பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<>>>>

உலகக்கோப்பை மகளிர் கபடிப் போட்டி பீஹாரின் ராஜ்கிர்-ல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்று வரும் தேசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியில் மத்தியப்பிரதேசம், மணிப்பூர், பஞ்சாப், உத்தரப்பிரதேச அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

**<<<<The End>>>>**